இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 01-09-2024

# ‘அமலாக்க’ அரசியல்

“சி.பி.ஐ., வருமான வரித்துறை, அமலாக்கத்துறை ஆகியவற்றை தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்க ஒன்றிய பா.ஜ.க. அரசு பயன்படுத்துகிறது” என்று அரசியல் களத்தில் ‘இந்தியா’ கூட்டணிக் கட்சித் தலைவர்கள் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார்கள். அதனை உச்சநீதிமன்றமே உறுதிப்படுத்தி விட்டது.

தெலுங்கானா முன்னாள் முதலமைச்சர் சந்திரசேகரராவின் மகளும் அந்த மாநில எம்.எல்.சி.யுமான கவிதா கடந்த மார்ச் மாதம் 15ஆம் தேதி அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டார். டெல்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டு இருந்த அவரை ஏப்ரல் 11ஆம் தேதி சி.பி.ஐ.யும் கைது செய்தது. டெல்லி மாநில அரசில் தனியார் மட்டுமே மதுபானம் விற்கலாம் என்று எடுத்த முடிவில் முறைகேடும், ஊழலும் நடந்திருப்பதாகச் சொல்லப்படும் வழக்கு இது. இதில் கைது செய்யப்பட்டு டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் சிறையில் இருக்கிறார். துணை முதலமைச்சர் மணீஷ் சிசோடியா பதினைந்து மாதங்கள் சிறையில் இருந்து சில வாரங்களுக்கு முன்தான் பிணையில் வெளியில் வந்துள்ளார்.

ஐந்து மாதங்களுக்குப் பின்னர் கவிதாவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.ஆர்.கவாய், கே.வி. விஸ்வநாதன் அமர்வு இந்த வழக்கை விசாரித்தது. “சி.பி.ஐ., அமலாக்கத்துறை விசாரணைகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன. எனவே கவிதாவை விசாரணைக்காக இனியும் காவலில் வைக்க வேண்டிய அவசியம் இல்லை. இதன் காரணமாக அவருக்குப் பிணை அளிக்கப்படுகிறது” என்று நீதிபதிகள் தீர்ப்பளித்தார்கள்.

இந்த வழக்கு தொடர்பாக மட்டுமல்ல; அமலாக்கத்துறை - சி.பி.ஐ. ஆகிய அமைப்புகளின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் நீதிபதிகள் தங்களது கடுமையான விமர்சனங்களைப் பதிவு செய்துள்ளார்கள். “தேவையில்லாமல் சிறையில் அடைத்துவைப்பது ஒரு தண்டனையாக அமைந்துவிடக்கூடாது. அதனால்கவிதாவுக்குபிணைவழங்கப்படுகிறது. அவர்தொடர்பான இரண்டு வழக்குகளிலும் 493 சாட்சிகள் இருக்கிறார்கள். 50 ஆயிரம் பக்கங்களுக்கு ஆதாரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவற்றை எல்லாம் விசாரிக்கத் தொடங்கினால் இப்போதைக்கு இந்த வழக்குக்கு முடிவு வராது. அதுவரையில் அவரை சிறையில் வைத்திருக்க முடியாது” என்று நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள்.

**கவிதாவுக்குப் பிணை வழங்கக் கூடாது என்று சி.பி.ஐ., அமலாக்கத்துறை வழக்கறிஞர் வாதிட்டார். இதனை நீதிபதிகள் ஏற்கவில்லை. “இந்த வழக்கில் அரசுத் தரப்பு நியாயமாக நடந்து கொள்ளவில்லை. குற்றம் சாட்டப்பட்டவராக கைதானவர் அப்ரூவராக மாறி இருக்கிறார். அந்த அப்ரூவர் அளித்த சாட்சியை வைத்து கவிதாவை கைது செய்துள்ளீர்கள். இப்படிப் போனால் நாளை யாரை வேண்டுமானாலும் கைது செய்வீர்களா? தேடித் தேடி கைதுசெய்து யாரை வேண்டுமானாலும் குற்றவாளிகளாக மாற்றிவிடுவீர்களா? சி.பி.ஐ.யும், அமலாக்கத்துறையும் இந்த வழக்கில் நியாயமாக நடந்து கொள்ளவில்லை” என்றும் நீதிபதிகள் கடுமையான விமர்சனத்தை வைத்தார்கள்.**

**சி.பி.ஐ., அமலாக்கத்துறை நினைத்தால் யாரை வேண்டுமானாலும் குற்றவாளி என்றோ, குற்றவாளி அல்ல என்றோ பதிவு செய்ய அதிகாரம் இருக்கிறதா? - என்பது தான் நீதிபதிகள் எழுப்பிய கேள்வி. அதனைத்தான் கேட்டார்கள் நீதிபதிகள்.**

ஜார்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரனுக்கு நெருக்கமான பிரேம் பிரகாஷ் என்பவரையும் கைது செய்து அடைத்துள்ளார்கள். அவருக்குப் பிணை வழங்கும் வழக்கில் நேற்றைய தினம் உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கி இருக்கிறது. “சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்குகளிலும் பிணை வழங்குவது எழுதப்படாத விதி, சிறை என்பது விதிவிலக்கு” என்று சொல்லி இருக்கிறார்கள் நீதிபதிகள்.

பா.ஜ.க. அரசு பழிவாங்கும் எண்ணத்துடன் விசாரணை அமைப்புகளைப் பயன்படுத்துகிறது. இதனை பலமுறை உச்சநீதிமன்றம் கண்டித்துள்ளது. ‘அமலாக்கத்துறை பழிவாங்கும் எண்ணத்துடன் செயல்படக் கூடாது’ என்று உச்சநீதிமன்றம் பலமுறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

டெல்லி துணை முதலமைச்சர் மணீஷ் சிசோடியாவுக்கு பிணை வழங்காமல் சிறையில் வைத்திருந்தார்கள். நாடாளுமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகு டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலை கைது செய்தார்கள். கைதுக்கான எந்த ஆதாரமும் தரவில்லை. “டெல்லி கலால் கொள்கை வழக்கில் 100 கோடி ரூபாய் பணப்பரிமாற்றம் நடந்துள்ளது என்றால் அந்தப் பணம் எங்கே? அதற்கான ஆதாரம் எங்கே?” என்று கேட்டது உச்சநீதிமன்றம். அமலாக்கத்துறையால் ஆதாரம் தர முடியவில்லை.

“இந்த வழக்கில் இதுவரை ஏதாவது சொத்து முடக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?” என்று நீதிபதிகள் கேட்டார்கள். அதற்கும் பதில் சொல்ல முடியவில்லை.

**“மதுபான முறைகேடு புகாரில் கைது செய்யப்பட்ட அரவிந்தோ ஃபார்மா இயக்குநரிடம் பா.ஜ.க. ரூ.55 கோடி தேர்தல் நன்கொடை பத்திரத்தைப் பெற்றுள்ளது. ரூ.55 கோடி மதிப்பிலான பணத்தை பா.ஜ.க.வுக்கு தேர்தல் பத்திரமாக வழங்கிய பின்னர் அரவிந்தோ ஃபார்மா இயக்குநர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். மதுபான வழக்குக் குற்றவாளியிடம் இருந்து ரூ.55 கோடி நன்கொடை பெற்றது குறித்து பிரதமர் மோடியும், பா.ஜ.க. தலைவர் நட்டாவும் விளக்கம் அளிக்க வேண்டும். நட்டாவை கைது செய்ய வேண்டும். இது குறித்து அமலாக்கத்துறை விளக்கம் அளிக்க வேண்டும்” என்று ஆம் ஆத்மி கட்சி கேள்வி எழுப்பியது. இதுவரை பா.ஜ.க. வாயே திறக்கவில்லை.**

சி.பி.ஐ., அமலாக்கத்துறையால் சோதனைக்குள்ளாக்கப்பட்ட 30 நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு நன்கொடை வழங்கிய தகவலும் பொதுவெளியில் வெளியானது. அதனையும் பா.ஜ.க. தலைமையால் மறுக்க முடியவில்லை. இதை அரசியல் தலைவர்கள் பொதுமேடைகளில் குற்றம் சாட்டி வருகிறார்கள். இத்தகைய அமலாக்க அரசியலைத்தான் அம்பலப்படுத்தி இருக்கிறது உச்சநீதிமன்றம்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 29.8.2024 அன்று அமெரிக்கா நாட்டின், சான் பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், இன்பிங்ஸ் ஹெல்த்கேர் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 50 கோடி ரூபாய் முதலீட்டில் 700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மதுரை எல்காட்டில் தொழில்நுட்பம் மற்றும் உலகளாவிய விநியோக மையம் (Technology and Global Delivery Center) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, அமெரிக்கா நாட்டின் சான்பிரான்சிஸ்கோவிற்கான இந்திய துணைத் தூதர் ஸ்ரீகர் ரெட்டி, இன்பிங்ஸ் ஹெல்த்கேர் நிறுவனத்தின் தலைமை மார்க்கெட்டிங் அலுவலர் ராதிகா டாண்டன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# அமெரிக்கப் பெருந்திட்டங்களின் தலைவர்களை பொது மேடையில் கொண்டுவருவதே இம்மாநாட்டின் நோக்கம்!

## சான்பிரான்சிஸ்கோ – தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை ... முதல் பக்கத் தொடர்ச்சி

சான்பிரான்ஸிஸ்கோ பே (Bay) மற்றும் கலிஃபோர்னியாவிலிருந்து எங்களது அழைப்பை ஏற்று மதித்து இங்கு திரளாக குழுமியிருக்கக் கூடிய முதலீட்டாளர்களை நான் அன்புடன் வரவேற்கவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

சான்பிரான்ஸிஸ்கோ பே பகுதி குறிப்பாக சிலிக்கான் வேலி தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சிக்குப் பெயர் பெற்ற பகுதி என்பது உலகம் அறிந்த உண்மை.

**தமிழ்நாட்டின் முன்னேற்றப் பயணத்தில் பதிலளிக்கக்கூடிய துறைகளைப் பற்றி விவாதிக்க அமெரிக்காவில் உள்ள பெருந்திட்டங்களின் தலைவர்களை ஒரு பொதுமேடையில் கொண்டு வருவதே இந்த மாநாட்டினுடைய முக்கிய குறிக்கோள்.**

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை விரைவுபடுத்துவதற்கான வழிகளைக் கண்டறியும் பயனுள்ள விவாதங்களுக்கு இந்த மாநாடு பெரும் உதவிகரமாக அமையும்.

### அகில இந்திய அளவில் முதலிடம் வகிக்கும் மாநிலம் தமிழ்நாடு!

ஆசியா நாடுகளின் நுழைவு வாயிலான சென்னையில் இருந்துதான் நான் வருகை தந்துள்ளேன். தமிழ்நாடு இன்று உலகில் வேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் ஒன்று. 39,000க்கும் மேலான தொழிற்சாலைகள், 2.6 மில்லியன் அளவிற்கு தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்கள் என்ற அளவில், அகில இந்திய அளவில் முதலிடம் வகிக்கும் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு அதிக அளவில் உள்ளது. மின்னணுவியல், மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகன உதிரி பாகங்கள், ஜவுளி மற்றும் ஆடைகள் ஆகிய பொருட்களின் ஏற்றுமதியில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக விளங்குகிறது. ஏற்றுமதி தயார்நிலைக் குறியீட்டிலும் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. சேவைகள் ஏற்றுமதியில் இரண்டாமிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் ஏற்கனவே சிறந்து விளங்கும் அறிவுசார் வளர்ச்சியை மேலும் மேம்படுத்தும் வகையில், இந்தியாவிலேயே முதன்முறையாக செயற்கை நுண்ணறிவு மையம் சமீபத்திலே சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது. இதன்மூலம் இத்துறையின் எதிர்கால வளர்ச்சி மேலும் மேம்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நவீன உள்கட்டமைப்பு, ஏராளமான வளங்கள் மற்றும் திறன்மிகு பணியாளர்களால் உலக முதலீட்டாளர்கள் வெகுவாக ஈர்க்கப்படுகிறார்கள். மக்களின் ஆற்றலை தமிழ்நாடு நன்கு பயன்படுத்துகிறது. தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் இளைஞர்கள் மற்றும் பணிபுரியும் வயதினர் ஆகியோரின் மக்கள் தொகை சற்றே அதிகம். இது எதிர்கால வளர்ச்சிக்கு ஒரு தனித்துவமான நன்மையை வழங்குகிறது. எனினும் அதற்கேற்றவாறு வேலைவாய்ப்புக்களை உருவாக்குவது எங்களுடைய இலக்கு. இதன்பொருட்டு, பல்வேறு முன் முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

### 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார தமிழ்நாடாக மாற்றும் இருமுனை முயற்சி!

2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை 1ட்ரில்லியன் அமெரிக்க டாலர் **பொருளாதாரமாக மாற்றவேண்டும் என்பது எங்களுடைய இலட்சிய இலக்கு. இதை அடைவதற்காக மூலதனம் அதிகம் உள்ள தொழில்களையும், வேலைவாய்ப்பினை அதிகப் படுத்தும் தொழில்களை ஈர்ப்பதில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம். இவ்வாறான இருமுனை முயற்சி தற்போது சாதகமான பலன்களை அளித்து வருகிறது.**

இவ்வாறான முன் முயற்சியின் ஒரு அங்கமாகத்தான் 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 மற்றும் 8ஆம் தேதிகளில் சென்னையில், “உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024”ஐ மிக வெற்றிகரமாக நடத்திக் காட்டினோம். 35க்கும் மேற்பட்ட வெளிநாடுகளிலிருந்து முதலீட்டாளர்கள், பன்னாட்டு பிரதிநிதிகள் மற்றும் புகழ்மிக்க தொழில் நிறுவனங்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.

அமெரிக்கப் பிரதிநிதித்துவம் இந்த மாநாட்டில் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்தது. அந்த மாநாடுகள் மூலமாக நாங்கள் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 631. ஈர்க்கப்பட்ட முதலீடுகளின் மதிப்பு 80 பில்லியன் அமெரிக்க டாலர்கள். இதன் மூலமாக, 1.4 மில்லியன் நபர்களுக்கு நேரடியாகவும், 1.2 மில்லியன் நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

> **“ஆசியா நாடுகளின் நுழைவு வாயிலான சென்னையில் இருந்துதான் நான் வருகை தந்துள்ளேன். தமிழ்நாடு இன்று உலகில் வேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் ஒன்று. 39,000க்கும் மேலான தொழிற்சாலைகள், 2.6 மில்லியன் அளவிற்கு தொழிற்சாலைகளில் பணி புரியும் பணியாளர்கள் என்ற அளவில், அகில இந்திய அளவில் முதலிடம் வகிக்கும் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.”**

இந்த பிரம்மாண்டமான நிகழ்வின் மூலம், உலக முதலீட்டாளர்களுக்கு தமிழ்நாட்டின் மேல் உள்ள நம்பிக்கையை உலகத்திற்கு நாங்கள் எடுத்துக்காட்டினோம். மொத்தமாகச் சொல்லவேண்டுமென்றால், கடந்த

3 ஆண்டுகளில் 3.1 மில்லியன் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் கிட்டத்தட்ட 120.48 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீடுகளை ஈர்த்து இருக்கிறோம்.

ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே வேலைவாய்ப்புக்கள் பெருமளவில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளும் சமமான அளவில், உறுதியாக சமூக பொருளாதார வளர்ச்சி பெற்று வருகின்றன. இவ்வாறு ஈர்க்கப்பட்ட முதலீடுகளில், அமெரிக்க நிறுவனங்களின் முதலீடுகளும் பெருமளவில் உள்ளது என்பதையும் நான் உங்களுடன் மிகவும் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

### இந்தியச் சந்தைக்குள் அமெரிக்க நிறுவனங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு!

இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையேயான பொருளாதார உறவுகள் சமீபகாலங்களில் மிகப்பெரும் எழுச்சி கண்டுள்ளது. இந்திய சந்தைக்குள் நுழையும் அமெரிக்க நிறுவனங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தெற்காசியாவிலேயே முதலீடுகளை ஈர்த்திட உகந்த மாநிலமாக விளங்கும் தமிழ்நாட்டில் எண்ணற்ற அமெரிக்கநிறுவனங்கள் தங்கள் திட்டங்களை இங்கே நிறுவியுள்ளார்கள். இன்னும் பல நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்குத் தேவையான பல்வேறு தொழில் கொள்கைகளையும், சிறப்பு ஊக்குவிப்புத் திட்டங்களையும் நாங்கள் வெளியிட்டிருக்கிறோம்.

மின்னணுவியல் கொள்கை, நிதிநுட்பக் கொள்கை, ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை ஒவ்வொரு திட்டத்திற்கும் தேவைப்படும் அனுமதிகளை விரைவாகவும், எளிதாகவும் பெற்றிடும் வகையில், ஒற்றைச்சாளர இணைய தளத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். இதன் மூலம், முதலீட்டாளர்கள் தங்கள் திட்டத்திற்குத் தேவையான அனுமதிகளை ஆன்லைனிலேயே பெற்றுக்கொள்ள முடியும்.

### வணிகம் புரிதலில் சிறந்த செயல் திறன் கொண்ட மாநிலம், தமிழ்நாடு!

வணிகம் புரிதலை எளிதாக்குவதற்காக நாங்கள் மேற்கொண்ட சிறப்பு முயற்சிகளின் காரணமாக, வணிகம் புரிதலை எளிதாக்கும் தரவரிசையில், “சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலம்” என்று தமிழ்நாடு வரையறுக்கப்பட்டுள்ளது.

மின்னணுவியல் (செமிகண்டக்டர்கள்) ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, அறைகலன்கள், மேம்பட்ட உற்பத்தி போன்ற துறைகளில் உங்களின் மேலான முதலீடுகளை நாங்கள் வரவேற்கிறோம். ஒருவருக்கொருவர் பரிமாறும் நட்பின் அடிப்படையிலான நல்லுறவின் மூலமாகத்தான் நாம் வளரமுடியும். இந்தியாவில் உள்ள அந்த நல்லுறவை, குறிப்பாக தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு அமெரிக்க நிறுவனங்கள் பயன்படுத்திட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உயர்ந்த மனித வாழ்வியல் நெறியைக் கொண்ட நாடு அமெரிக்கா. அந்த அடிப்படையோடு, தமிழ்நாட்டின் தொழில் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு நீங்கள் பங்களிக்க முதலீட்டாளர்களை சிவப்புக் கம்பளம் விரித்து தமிழ்நாடும் உங்களை வரவேற்கக் காத்திருக்கிறது.

### மாநாடு சிறப்புற நடைபெற உறுதுணை புரிந்த அனைவருக்கும் நன்றி!

எங்களின் அரசுப் பயணம் பெரும் வெற்றி பெற உறுதுணையாக நின்ற சான்பிரான்ஸிஸ்கோ துணைத் தூதர் டாக்டர் ஸ்ரீகர் ரெட்டி அவர்களுக்கும், அவரது குழுவினைச் சார்ந்த அனைத்து தூதரக அதிகாரிகளுக்கும், இதையெல்லாம் ஒருங்கிணைத்த கௌரவ் வர்மா அவர்களுக்கும், லேலா கண்ணப்பன் அவர்களுக்கும், என்.ரங்கசாமி அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இம்மாநாடு சிறப்புற நடைபெறுவதற்கு பெருமளவில் வருகை புரிந்துள்ள தொழிலதிபர்களுக்கும், பல்வேறு நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, உங்களை எல்லாம் இந்த மாலை நேரத்தில் மகிழ்ச்சியோடு காண்பதற்கு ஒரு நல் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கக்கூடிய அனைவருக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.